# தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்

## தூத்துக்குடி மாவட்டக்குழு

A I K S

பாலன் இல்லம்
36/8.போல்டன்புரம் 2-வது தெரு
தூத்துக்குடி - 628 003
அலுவலகம் : 0461 - 2327004
தலைவர் : 04639 - 235873
செயலாளர் : 9442604416

தேதி : 29-10-14

மாவட்ட
தலைவர் / செயலாளர் : S. NALLIAH

To

The Deputy General Manager & CPIO
Power Grid Corporation of India Ltd
Southeren Region Transmission
Bangalore

Sir,

Ref: Your letter SR-II : RTI : F-280 : 2014 dated 15-10-2014

With reference to your letter cited above in the reference, I am re-submitting my letter under RTI act along with the postal order for Rs 10/= as application fee as required by you.

Thanking you,

Yours faithfully
[signature]
(S. NALLIAH)

पावरग्रिड, द.क्षे.पा.प्र-II मुख्यालय
POWERGRID, SRTS II HQ
आवक/INWARD
सं/NO 58256
दि/Dt 10/11/14

# தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்

## தூத்துக்குடி மாவட்டக்குழு

பாலன் இல்லம்
36/8,போல்டன்புரம் 2-வது தெரு
தூத்துக்குடி - 628 003
அலுவலகம் : 0461 - 2327004
தலைவர் : 04639 - 235873
செயலாளர் : 9442604416


~~தலைவர்~~ / செயலாளர் S. நல்லையா

தேதி : 8.10.14

பெறுநர் :




மேலாளர் அவர்கள்
765/400 K.V தூத்துக்குடி பூலிங்ஸ்டேசன்
பவர்கிரிட் கார்பரேசன் ஆப் இந்திய லிட்
எட்டயபுரம், தூத்துக்குடி நான்கு வழிச்சாலை,
எட்டயபுரம்.

ஐயா,

வணக்கம் 2005- தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பின்கண்ட தகவல்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. எட்டயபுரம் - தூத்துக்குடி நான்கு வழிச்சாலையில் அமைக்கப்பட்டுவரும் பவர்கிரிட் நிறுவன மின் நிலையத்திற்கு எத்தனை ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது ?
2. கோவில்பட்டி கோட்டாட்சியர் மூலம் நிலம் கையகப்படுத்த பத்திரிக்கைகளில் வெளிவந்த பின்னர் கையகப்படுத்தப்பட்டதா ? அல்லது நிறுவனம் நீதிமன்றம் மூலம் கையகப்படுத்தப்பட்டதா என்ற விவரம்.
3. நீதிமன்ற வாயிலாக கையகப்படுத்தப்பட்டிருப்பின் நிலத்திற்குரிய இழப்பீடு தொகை எவ்வளவு வழங்கப்பட்டது ? தொகை பெற்றவர்களின் பெயர் , முகவரி விவரங்கள்.
4. பத்திரிக்கையில் வெளியான அறிவிப்பிலிருந்து கையகப்படுத்தப்பட்ட நிலம் உபரிநிலமாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டதாக தெரிகிறது. அப்படியெனில் அதற்கு திருநெல்வேலி உதவி ஆணையர் ( நில உச்சவரம்பு ) அவர்களிடமிருந்து தடையில்லா சான்றிதழ் வழங்கப்பட்டதா ? அதனுடைய விவரங்கள்.
5. நிறுவனம் கையகப்படுத்தும் நிலத்திற்கு அருகில் விவசாயிகளின் விளை நிலங்கள் உள்ளன. இந்நிலையில் அந்தப் பகுதி விவசாயிகளின் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தப்பட்டதா ? மாசு கட்டுப்பாடு தொடர்பான கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தப்பட்டதா ? இவை பற்றி விவரங்கள்.
6. உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் தீர்ப்பில் ( W.P.(MD) No 20427 of 2013 நாள் 17-12-2013) கூறிய வழிகாட்டுதலின்படி மேலரால் விவசாயிகளுக்கு தங்கள் விளை நிலத்திற்கு செல்ல பாதை அனுமதிக்கப்பட்டதா ? இல்லையெனில் அதற்கான காரணங்கள் என்ன ?
7. பவர் கிரிட் நிறுவனத்தின் மின் கம்பிகள் கொண்டு செல்ல விளை நிலங்களில் கம்பங்கள் குழிதோண்டி அமைப்பது குறித்து விவசாயிகளிடம் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பட்டதா ? கம்பங்கள் நிறுத்தப்படும் நிலத்திற்கு இழப்பீடு வழங்கப்படுமா ?
8. எட்டயபுரம் வட்டத்தில் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலம் இருக்கும் பொழுது, நிறுவனம் விவசாயிகளின் விளை நிலங்ளை கையகப்படுத்தக் காரணம் என்ன ?

மேற்கண்ட தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்

S. நல்லையா
மாவட்ட செயலாளர்